நீதிமன்ற படிவ எண்.53

(விதி 42ஐ காண்க)

சாட்சியின் சான்றுரை

(அத்தியாயம் XXV, BNSS)

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.

**SPL. SC No. 16/2021**

**அ.சா.6 சாட்சியின் சான்றுரை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபால் | வயது | : | 42/2026 |
| த/பெ. | : | ஈஸ்வரன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | காஞ்சிக்கோவில் | தாலுகா | : | பெருந்துறை |
| மாவட்டம் | : | ஈரோடு | | | |

**21.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.**

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் 6ம் சாட்சி முதல் விசாரணை** :

நான் தற்போது காஞ்சி கோவிலில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும், அவர் எனது உறவினராகும். சாட்சி தங்க லட்சுமியை எனக்கு தெரியாது. தங்கலட்சுமியை ஒருமுறை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். தங்கலட்சுமியை எதிரி பரணிதரன் திருமணம் செய்து கொண்டார் என்றும், அதில் பிரச்சினை ஆனதால் என்னை காவல் நிலையத்திற்கு சாட்சி கையொப்பம் போடுமாறு காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்ததால் நான் சென்றேன். என்னிடம் காட்டப்படும் படிவம் 91ல் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். எதிரியை ரிமாண்ட் செய்த போது என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள், அதற்காக நான் கையொப்பம் போட்டேன். சாட்சி தங்கலட்சுமிக்கும், எதிரி பரணிதரனுக்கும் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது. **படிவம் 91ல் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.7** ஆகும். போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருதவேண்டும் என்று அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனது போலீஸ் விசாரணையில் நான் இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும், எதிரி பரணிதரன் 04.04.2021ம் தேதி பகல் 11.30 மணிக்கு விருப்பம்பதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து வாதி தங்கலட்சுமியை ஜாதியை சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டி அடித்து உதைத்து கொலைமிரட்டல் செய்தார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும், எதிரியை கைது செய்தது பற்றிய விவரம் தெரிந்து கைது நமூனாவில் கையொப்பம் செய்தேன் என்றும், பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருட்களை படிவம் 91ல் கைப்பற்றியதற்கு

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.07.21 18:32:35 +0530

சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும், இது சம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> : இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.07.21 18:32:43 +0530

Principal District and Sessions Judge,

Erode.

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(அத்தியாயம் XXV, BNSS)
முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.

**SPL. SC No. 16/2021**

**அ.சா.7 சாட்சியின் சான்றுரை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவீந்திரன் | வயது | : | 26/2026 |
| த/பெ. | : | நல்லசாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஊனாங்காட்டுவலசு, காஞ்சிக்கோவில் | தாலுகா | : | பெருந்துறை |
| மாவட்டம் | : | ஈரோடு | | | |

**21.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.**

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் 7ம் சாட்சி முதல் விசாரணை** :

நான் காஞ்சிகோயில் ஊனாங்காட்டுவலசில் குடியிருந்து வருகிறேன். நான் பிஎஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்து தற்போது விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான் . அந்த **கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.8.** ஆகும். முதல் கையொப்பம் எனது அண்ணன் அன்பழகனின் கையொப்பம் ஆகும். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டதற்கும், மாதிரி வரைபடம் வரைந்த போது சாட்சியாக என்னை சாட்சியாக இருப்பதற்கும் கையொப்பம் பெற்றார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

என்னிடம் கையொப்பம் முதல் நிலை காவலர் வாங்கினார். நானும், எனது அண்ணனும் கையொப்பம் செய்த போது அந்த தாளில் ஏதாவது எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது, ஆனால் அதில் என்ன என்று நான் படித்து பார்க்கவில்லை. நானும், எனது அண்ணனும் காஞ்சிக்கோவில் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தோம்.

**மறு விசாரணை :** இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.07.21 18:33:00 +0530

Principal District and Sessions Judge,
Erode.